# ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக்

# பாரிஸ் 2024




ஸ்ரீ காளீஸ்வரர் செ

**ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் : பாரிஸ் 2024**

ஸ்ரீ காளீஸ்வரர்

ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் : பாரிஸ் 2024
ஸ்ரீ காளீஸ்வரர்

srikaleeswarar@myyahoo.com

மின்னூல் வெளியீட்டாளர்: https://FreeTamilEbooks.com
அட்டைப்படம்: த. சீனிவாசன் tshrinivasan@gmail.com
மின்னூலாக்கம்: த. சீனிவாசன் tshrinivasan@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

Ebook Publisher: https://FreeTamilEbooks.com
Cover Image: T Shrinivasan- tshrinivasan@gmail.com
Ebook Creation: T Shrinivasan- tshrinivasan@gmail.com
Ebook Project: Kaniyam Foundation – kaniyam.com/foundation

உரிமை : Creative Commons Attribution -NonCommercial-ShareAlike ( எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்விற்பனை கூடாது) .

பதிவிறக்கம் செய்ய -
https://FreeTamilEbooks.com/ebooks/olympics_para_olympics_paris_2024

## பொருளடக்கம்

என்னை பற்றி........6

2 உலக ஒலிம்பிக் தினம் (23/06/2024)........9
3 ஒலிம்பிக் போட்டிகள் தொடக்கம் ( 26/07/2024)........11
4 கிடைத்தது முதல் பதக்கம்! (28/07/2024)........13
5 மீண்டும் இந்தியாவிற்கு ஒரு பதக்கம் (30/07/2024)........15
6 ராசியான “துப்பாக்கி சுடுதல்”! (01/08/2024)........16
7 52 வருட வெற்றிக் கனவு நிறைவேறியது!........19
8 ஒலிம்பிக் மீள் ஆய்வு கட்டுரை துணுக்குகள்........20
9 ஹாக்கி அணியின் எல்லை காவலன் ஸ்ரீஜேஷ் (04/08/2024)........22
10 கலைந்தது ஒலிம்பிக் கனவு (07/08/2024)........24
11 வெண்கலத்தை சொந்தமாக்கியது இந்திய ஹாக்கி அணி!........26
12 வெள்ளி வென்றார் நீராஜ் சோப்ரா! இறுதிக்கட்டத்தை எட்டியது ஒலிம்பிக்!........28
13 அமன் ஷெராவத்........31
14 ஒலிம்பிக்கின் இறுதி வாரத் துணுக்குகள்........33
15 கவனத்தை ஈர்த்த ஒலிம்பிக் வீரர்கள் : பகுதி 1........34
16 கவனத்தை ஈர்த்த ஒலிம்பிக் வீரர்கள் பகுதி :2........40
17 கருவோடு களம் கண்ட நாடா ஹாபிஸ் ( NADA HAFEZ)........43
18 தகுதி நீக்கம் செய்யப்பட்ட பராகுவே நாட்டு வீராங்கனை........46
19 இரஷ்யா இல்லாத ஒலிம்பிக் போட்டிகள்........48
20 இறுதிவரை சென்ற இந்திய வீரர்கள்........50
21 இனிதே நிறைவடைந்தது, ஒலிம்பிக்ஸ்! (12/08/2024)........52
22 இந்தியாவால் ஒலிம்பிக் போட்டியை நடத்த முடியுமா?........55
23 பாரா ஒலிம்பிக்கின் கதை........57
24 பதக்க வேட்டையில் கலக்கிய இந்திய பாரா ஒலிம்பிக் அணி (30/08/2024)........59
25 நான்கு வீரர்கள், நான்கு சூழல்கள்! (31/08/2024)........61
26 தொடரும் பதக்க மழை (02/09/2024)........65
27 மூன்றாவது முறையாக பதக்கம் வென்றார் மாரியப்பன் தங்கவேலு (04/09/2024)........66
28 இரண்டாவது முறை பதக்கம் வென்ற பாரா ஒலிம்பிக் நாயகர்கள்........68
29 பதக்க பட்டியல் – பாரா ஒலிம்பிக்ஸ்........70
30 நிறைவடைந்தது பாரா ஒலிம்பிக் போட்டிகள் (09/09/2024)........76
31 கணியம் அறக்கட்டளை........78

## என்னை பற்றி

என்னை பற்றி சொல்லபோனல் ஒரு சாதாரண கல்லூரி மாணவன் .முதலாவதாக என்னுடைய இந்த புத்தகத்தை படித்து கொண்டிருக்கும் அனைவருக்கும், நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

சிறு வயது முதலே, ஒலிம்பிக் விளையாட்டுகளின் மீது ஒரு அலாதி பிரியம். மற்றபடி, புத்தகம் எழுத வேண்டும் எனும் ஆர்வமும் சிறு வயது முதலே இருந்து வந்தது.



வேறு யாரும் அல்ல! நான் தான்

அதற்காக, பல புத்தகங்களையும் எழுத முயற்சி செய்து இருக்கிறேன். ஆனால், எதாவது தடை ஏற்பட்டு அந்த பணிகள் பாதியிலேயே நின்றுவிடும். முதலில் ஒலிம்பிக் தொடர்பாக பொழுதுபோக்கு நோக்கத்திலேயே கட்டுரைகளை எழுத தொடங்கினேன்

அப்படி,இப்படி சுமாராக 15 கட்டுரைகளை எழுதிவிட்டேன். சரி இவை அனைத்தையும் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட உதவ முடியுமா? என கணியம் பொறுப்பாசிரியரிடம் கேட்டு இருந்தேன்.

அவரும் வெளியிட அனுமதி அளிக்கவே! கட்டுரைகள் அனைத்தையும் தொகுக்க ஆரம்பித்தேன்.

அதன் நீட்சியாக “ஒலிம்பிக்” குறித்த இந்த புத்தகத்தை உங்கள் மத்தியில் வெளியிடுகிறேன்.

இந்த புத்தகத்தை எழுவதற்கு ஆக்கமும்,ஊக்கமும் தந்த என்னுடைய நண்பர்கள்,ஆசிரியர்கள்,கணியம் ஆசிரியர் த.ஸ்ரீனிவாசன் மற்றும் இந்திய ஒலிம்பிக் வீரர்கள் மேலும் என்னுடைய படைப்புக்கு உயிர் கொடுக்கும் வாசகர்களுக்கும், இந்த புத்தகத்தை சமர்பிக்கிறேன்.

தொடர்புக்கு: https://ssktamil.wordpress.com

அலைபேசி எண்: +916385644103

## 2 உலக ஒலிம்பிக் தினம் (23/06/2024)

உலகம் முழுவதும் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு விளையாட்டு திருவிழா தான் ஒலிம்பிக். உலகெங்கிலும் இருக்கும் ஏகோபித்த நாடுகளும் பங்கேற்கும் ஒரு மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக்; அதன் வரலாற்றை கிட்டதட்ட 3000 ஆண்டுகளுக்கு முன்னால் ஒளித்து வைத்திருக்கிறது.



சுமார் கிமு 780களில் கிரேக்க கடவுளான “ஜீயஸ்”அவர்களை கௌரவப்படுத்தும் விதமாக இந்த ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

தொடக்க காலத்தில் குறிப்பிட்ட சில சாம்ராஜ்யங்களை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மட்டும் பங்கேற்ற ஒலிம்பிக் போட்டியில், அக்காலத்தில் பிரபலமாக இருந்த மல்யுத்தம்,தடகளம் மற்றும் குதிரைப் பந்தயம் போன்ற விளையாட்டுகள் நடைபெற்றதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். தொடர்ந்து 12 நூற்றாண்டுகளுக்கு, ஒலிம்பிக் போட்டிகள் பல காரணங்களால் கலை இழந்து போயின

அதை மீட்கும் நோக்கில் 1896 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கின் தாயகமான கிரேக்கத்தின் ஏதேன்ஸ் நகரில், மீண்டும் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்டன. அதில் இருந்து உலகப்போர்கள் உள்ளிட்ட, சில சில காரணங்களால் மட்டும் ஒலிம்பிக் போட்டிகள் சில தடவை நடத்தப்படாமலும் தள்ளிப் போகவும் செய்தன கடந்து டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் கூட

கரோனா பெருந்தொற்றால் ஓராண்டு ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கிட்டதட்ட 200க்கும் அதிகமான நாடுகள் ஒலிம்பிக் கூட்டமைப்பில் உறுப்பு நாடுகளாக இணைந்துள்ளன ஒலிம்பிக்கின் முடிசூடா மன்னர்களாக அமெரிக்கா ரஷ்யா சீனா ஜப்பான் இங்கிலாந்து பிரான்ஸ் போன்று நாடுகள் இருக்கின்றன. பெரும்பாலும்  பெரும்பாலும் பதக்கப் பட்டியலில் இவைதான் முன்னணி இடங்களையும் பிடிக்கின்றன. இந்தியா உள்ளிட்ட இந்திய தீபகற்பத்தை சேர்ந்து நாடுகள் ஒலிம்பிக்கில் பின்தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. முதல் முறையாக கடந்த டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியா 7 பதக்கங்களை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தனை ஆண்டு கால வரலாற்றில் முதல்முறையாக தடகளத்தில் தங்கப் பதக்கத்தையும் இந்தியா வென்றிருந்தது.

வேற்றுமைகள் இனம் மொழி உலக பிரச்சனைகள் சர்வதேச நெருக்கடிகள் உள்ளிட்ட பலவற்றையும் கடந்து அனைவரும் உற்று நோக்கும் விளையாட்டின் ஒரு ஆனந்த பெருவிழாவாக இன்றளவும் ஒலிம்பிக் போட்டிகள் திகழ்கின்றன இந்த முறை 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரை அலங்கரிக்க இருக்கிறது. இத்தகைய சிறப்பு மிக்க ஒலிம்பிக் போட்டிகளை கௌரவிக்கும் விதமாக 1948 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜூன் 23ஆம் தேதி சர்வதேச ஒலிம்பிக் தினமாக கொண்டாடப்படுகிறது. அந்த சர்வதேச ஒலிம்பிக் தினம் வரலாற்றில் இன்று.

# 3 ஒலிம்பிக் போட்டிகள் தொடக்கம் ( 26/07/2024)

உலகப் புகழ் பெற்ற 23 வது ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸ் நகரத்தில் இன்று தொடங்குகிறது.



உலகில் உள்ள 200க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களை சேர்ந்த வீரர்கள், இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.

இந்த முறை, முதல் முறையாக பால் புதுமையர்(LGBTQ+) அணி, உள்ளிட்ட பல சிறப்பம்சங்கள் ஒலிம்பிக் போட்டிகளை நிறைத்திருக்கின்றன.

முதல்முறையாக செய்னஸ் நதிக்கு அருகில், பாரிஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகளில் தொடங்கவிருக்கிறது.

வழக்கம்போல, இந்திய வீரர்களின் மீது பதக்க கனவுகள் குவிந்திருக்கின்றன. சுமார் 110க்கும் அதிகமான வீரர்கள் இந்தியா சார்பில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

இவர்களில் குறிப்பிடும் படியாக ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, வில்வித்தை வீராங்கனை தீபிகா, பேட்மிட்டன் வீராங்கனை பி.வி. சிந்து, இந்திய ஆக்கி அணி, மற்றும் ஒரு சில குறிப்பிட்ட மல்யுத்த வீரர்களின் மீது நம்பிக்கை அதிகமாக உள்ளது.

கடந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில், இந்தியா 7 பதக்கங்களை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும், முதல் முறையாக தடகளத்தில்(நீரஜ் சோப்ரா) தங்கப் பதக்கத்தை வென்றது இந்திய அணி.

இம்முறை பதக்க பட்டியலில் இரட்டை இலக்கத்தை தொட வேண்டும், என்பதே இந்தியாவின் நோக்கமாக இருக்கிறது.

உலகின் மிகப்பெரிய மக்கள் தொகையை கொண்ட நாடு! பதக்கப் பட்டியலில் எப்போதும் கடைசி யான இடத்திலேயே(50க்கும் கீழ்) இடம் பெறுவது, ஒவ்வொரு ஒலிம்பிக் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுகிறது.

அவை அனைத்தையும் பொய்யாக்கும் வகையில், ஒரு புதிய சாதனையை இந்திய அணி படைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

உலகில் நிலவும் மிக மோசமான போர் சூழலில் ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸ் நகரில் நடைபெறவிருக்கின்றன.

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், கார்பன் உமிழ்வை குறைக்கும் விதமாக, புதிய முறைகளை அதிகரித்து இருக்கிறது, பிரான்ஸ் அரசாங்கம்!

நூறாண்டுகளுக்கு பிறகு ,ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை பிரான்ஸ் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எது எப்படி இருந்தாலும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கும் தினம் வரலாற்றில் இன்று.

## 4 கிடைத்தது முதல் பதக்கம்! (28/07/2024)



பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நடைபெற்று வரும் 33 ஆவது ஒலிம்பிக் போட்டியில் முதல் பதக்கத்தை பெற்று உள்ளது இந்தியா.

22 வயதான மனு பாகர், 10 metre ஏர் பிஸ்டல் பிரிவில் வெண்கல பதக்கம் வென்றார்.

வெறும் 0.1 புள்ளிகள் வித்தியாசத்தில் வெள்ளி பதக்கம் வெல்லும் வாய்ப்பை நழுவ விட்டார்.

பொதுவாகவே கண் பார்வை, கவனம் மற்றும் கை நரம்புகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்கக்கூடிய 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் முதல் முறையாக பதக்கம் வென்றிருக்கிறார்.

இதற்கு முன்பு, துப்பாக்கிச் சூடுதல் தொடர்பான விளையாட்டுகளில் இந்திய பெண் வீராங்கனைகள் பதக்கம் வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், பதக்கப் பட்டியலில் இந்தியாவின் முதல் பதக்கத்தை இணைத்து இருக்கிறார்! சாதனை பெண் மனு பாகர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய பெண்கள் வில்வித்தை அணி நெதர்லாந்து அணி இடம் தோல்வி அடைந்திருப்பது, ஒருபுறம் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

ஒலிம்பிக் போட்டிகளில் அடுத்தடுத்து என்ன விறுவிறுப்புகள் காத்திருக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்!

# 5 *மீண்டும் இந்தியாவிற்கு ஒரு பதக்கம்* (30/07/2024)




ஏற்கனவே 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பெண்கள் பிரிவில் வெண்கல பதக்கம் வென்று நாட்டிற்கு பெருமை சேர்த்திருந்தார் "மனு பாகர்".

அந்த வகையில் , 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவில், வெண்கல பதக்கத்திற்கான போட்டியில் தென் கொரியாவை வீழ்த்தி, வெண்கல பதக்கத்தை பெற்றிருக்கிறது சரபோஜோட் சிங் மற்றும் மனு பாகர் இணை.

இது மானு பாகருக்கு இரண்டாவது பதக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் மூலம், ஒரே ஒலிம்பிக் போட்டியில் இரண்டு முறை பதக்கம் வென்ற, முதல் இந்திய வீராங்கனை என்னும் சாதனையை படைத்திருக்கிறார் மனு பாகர்.

தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிகளில் மேலும் பதக்கங்களை எதிர்பார்க்கலாம்.

# 6 *ராசியான "துப்பாக்கி சுடுதல்"*! (01/08/2024)




பிரான்ஸ் நாட்டின், பாரிஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கி கிட்டதட்ட ஒரு வார காலம் நிறைவடைந்து விட்டது.

பதக்க பட்டியலை பொறுத்த அளவில், எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் விதமாக சீனா முதலிடம் வகிக்கிறது. அதைத் தொடர்ந்து பிரான்ஸ்,ஜப்பான்,அமெரிக்கா போன்ற நாடுகள் இருக்கின்றன.

வழக்கமாகவே ஒலிம்பிக் பதக்கங்களுக்கும், இந்திய அணிகளுக்கும் ஏழாம் பொருத்தமாகவே இருந்து வருகிறது.

ஆனால், இந்த முறை ஒலிம்பிக்கில் சற்று சுவாரசியமாக மூன்று வெண்கல பதக்கங்களை தற்போது வரை வென்றிருக்கிறது இந்திய அணி.

அந்த மூன்று வெண்கல பதக்கங்களும் துப்பாக்கி சுடுதல் மூலமே இந்திய அணிக்கு கிடைக்கப் பெற்று இருக்கிறது.

ஏற்கனவே, தனிநபர் 10 மீட்டர் ஏற்பட்ட பிஸ்டல் பிரிவில் மனு பாகெர் வெண்கல பதக்கம் வென்று இருந்தார். அதைத்தொடர்ந்து கலப்பு இரட்டையர் பிரிவிலும் அவரது அணி வெண்கல பதக்கம் வென்று இருந்தது.

தற்பொழுது, இன்றைக்கு 50 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் ஸ்வப்னால் குசலே வெண்கல பதக்கம் என்று அசத்தியிருக்கிறார்.




0.6 புள்ளிகள் வித்தியாசத்தில் முதல் இரண்டு இடங்களுக்கான போட்டியிலிருந்து அவர் வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல 0.1 புள்ளிகள் வித்தியாசத்தில், மற்றொரு துப்பாக்கி சுடுதல் வீரரான பபுதா வெளியேறியிருந்ததும் கவனிக்கத்தக்கது.

முதன் முதலில், இந்தியாவிற்கு தனிநபர் பிரிவில் தங்கத்தைப் பெற்றுத் தந்தது இதே துப்பாக்கி சுடுதல் விளையாட்டு தான்..

2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில், அபினவ் பிந்த்ரா தங்கப்பதக்கம் என்று அசத்தியிருந்தார்.

அதைத் தொடர்ந்து பெரியதாக இந்தியாவிற்கு துப்பாக்கி சுடுதல் விளையாட்டுகள் கை கொடுக்காமலேயே இருந்தன.

கடந்த இரண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும், பெரிய அளவில் துப்பாக்கிச் சுடுதலில் இந்திய அணிகள் சோபிக்கவில்லை.

ஆனால், இந்த முறை பெருமளவில் இந்திய வீரர்கள் சிறப்பாக தங்கள் திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், தமிழகத்தில் இருந்து மிகவும் எதிர்பார்க்கப்பட்ட துப்பாக்கிச் சுடுதல் வீரர்களான பிரித்திவிராஜ் தொண்டைமான் மற்றும் இளவேனில் ஆகியோர் பெரியதாக சோபிக்கவில்லை.

உண்மையில், மனோதிடத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் துப்பாக்கி சுடுதல் விளையாட்டு.

ஆழ்ந்த மனக்கட்டுப்பாடு இருப்பவர்களால் மட்டுமே துப்பாக்கி சுடுதலில் சிறந்த வெற்றியை பெற முடியும்.

கை நரம்புகளுக்கு அதிக அழுத்தத்தை கொடுக்கக்கூடிய துப்பாக்கி சூடுதல் விளையாட்டுக்கு, இந்தியாவில் பெரியதாக ரசிகர் பட்டாளம் எல்லாம் கிடையாது.

உண்மையை கூறப்போனால், பலருக்கும் இப்படி ஒரு விளையாட்டு இருக்கிறது என்பதே தெரியாது.

உலகளாவிய அளவில் பிற நாடுகள் ஒலிம்பிக் போட்டிகளை மிகவும் உன்னிப்பாக கவனிக்க கூடியவை.

நான்கு ஆண்டுகளில்சிறப்பாக தயார் செய்து , தங்களது அணிகளை ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்புகின்றன.

கடந்த சில ஒலிம்பிக் போட்டிகளாக தான், இந்தியாவும் அதிக கவனத்தை செலுத்த தொடங்கி இருக்கிறது.

வரும் தசாப்தங்களில், பதக்க பட்டியலில் மூன்று இலக்கத்தை இந்திய அணி பிடிக்கும் என்கிற கனவு என்னை போன்ற ஒலிம்பிக் ரசிகர்களுக்கு எப்போதும் உண்டு.

அதற்கு தொடக்கப் புள்ளியாக, இம்முறை பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்திய அணி இரட்டை இலக்கத்தை பதக்க பட்டியலில் தொடும் என்று நம்புகிறேன்.

பார்ப்போம் இன்னும் 11 நாட்கள் மீதம் இருக்கின்றன.

# 7 52 வருட வெற்றிக் கனவு நிறைவேறியது!

ஒலிம்பிக் வரலாற்றில் 52 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலியா ஹாக்கி அணியை வீழ்த்தி சாதனை படைத்திருக்கிறது இந்திய ஆடவர் ஆக்கியது.

இந்திய நேரப்படி மாலை 5:30 மணிக்கு மேல் தொடங்கிய இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான ஆடவர் ஹாக்கி போட்டியில் 3-2 எனும் புள்ளிக் கணக்கில் ஆஸ்திரேலியா அணியை வீழ்த்தி 52 ஆண்டு கால வெற்றி தாகத்தை தீர்த்து இருக்கிறது இந்திய ஆடவர் ஹாக்கி அணி.

1972 முனிச் ஒலிம்பிக் போட்டிகளில் ஆஸ்திரேலியா ஹாக்கி அணியை வீழ்த்திருந்தது இந்திய ஹாக்கி அணி.

அதற்குப் பிறகு கடந்த 52 ஆண்டுகளில் ஒரு முறை கூடி இந்திய ஆக்கி அணி ஆஸ்திரேலிய ஆக்கிய அணியை வீழ்த்தியது கிடையாது என்பதுதான் நிதர்சனம்.

இந்த 52 ஆண்டுகால மோசமான வரலாற்றை மாற்றி எழுதியிருக்கிறது தற்போதைய இந்திய ஆடவர் ஆக்கி அணி.

# 8 ஒலிம்பிக் மீள் ஆய்வு கட்டுரை துணுக்குகள்

ஆகஸ்ட் மூன்றாம் தேதி எழுதப்பட்ட மீள் ஆய்வு கட்டுரையிலிருந்து பெறப்பட்ட தகவல்கள்!

முதலாவதாக, இந்திய ஒலிம்பிக் அணியில் இருந்து ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன்.

இந்த ஒரு வாரத்தில் மட்டும், இந்திய ஒலிம்பிக் அணிக்கு மூன்று பதக்கங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.

மூன்று பதக்கங்களும் துப்பாக்கிச் சுடுதலில் பதக்கமாக கிடைக்கப்பெற்றுள்ளது.

இதில் இரண்டு பதக்கங்களைப் கைப்பற்றி, இந்திய ஒலிம்பிக் வரலாற்றில் சாதனை புரிந்திருக்கிறார் துப்பாக்கி சுடுதல் வீராங்கனை மனு பாகேர்.

இறுதியாக, இன்று மதியம் நடைபெற்ற 25 மீட்டர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் நான்காவது இடம் பிடித்து அதிர்ச்சி தோல்வி அடைந்திருந்தார் அவர்.

அதே நேரம், 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து பதக்கம் வென்றிருந்த் பேட்மிட்டன் வீராங்கனை பிவி சிந்து, கால் இறுதி போட்டியோடு வெளியேறி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மேலும், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட, பேட்மிண்டன் ஆண்கள் இரட்டையர் பிரிவு வீரர்களான ஷெட்டி மற்றும் ரெட்டி கூட்டணியும், நேற்று அதிர்ச்சி தோல்வி அடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும் 52 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒலிம்பிக்கில் ஆஸ்திரேலியா ஆக்கி அணியை வீழ்த்தி இருக்கிறது இந்திய ஹாக்கி அணி.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட் இந்திய வில்வித்தை அணியும் பெரிய அளவில் சோபிக்கவில்லை! கலப்பு இரட்டையர் பிரிவில் மட்டும் அரை இறுதி வரை நுழைந்திருந்த இந்திய அணி, அதை தொடர்ந்து இருந்து இரண்டு போட்டிகளிலும் தோல்வி அடைந்தது! இதனால் வெண்கல பதக்கம் வெல்லும் வாய்ப்பு கூட இல்லாமல் போயிருக்கிறது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட துப்பாக்கி சுடுதல் வீரரான, பபுதா நான்காவது இடம் பெற்று அதிர்ச்சி தோல்வி அடைந்தார். மேலும், அவர் உணர்ச்சிவசப்பட்டு வெளியேறியது அனைவரையும் கண்கலங்க செய்தது.

எதிர்பார்க்கப்பட்ட் தமிழக துப்பாக்கி சுடுதல் வீரர்களான, பிரித்திவிராஜ் தொண்டைமான் மற்றும் வீராங்கனை இளவேனில் ஆகியோர் பெரிதாக சோபிக்கவில்லை.

தற்பொழுது வரை, பேட்மிட்டனில் லக்ஷயா சென் மட்டுமே அரை இறுதி போட்டிகளுக்கு முன்னேறி இருக்கிறார்.

மேலும் இந்திய அணி எதிர்பார்க்கக் கூடிய பல போட்டிகளும் இன்னும் ஒரு வார காலத்திற்குள் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, பதக்க பட்டியலில் இந்தியாவிற்கு ஒரு குறிப்பிட்ட கிடைக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

# 9 ஹாக்கி அணியின் எல்லை காவலன் ஸ்ரீஜேஷ் (04/08/2024)



இந்தியா மற்றும் பிரிட்டன் அணிகளுக்கு இடையேயான , ஒலிம்பிக்! காலிறுதி ஹாக்கி போட்டியில் ஷூட் அவுட் முறையில் இந்திய அணி வெற்றி பெற்றிருக்கிறது.

இந்த போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதற்கு மிக முக்கியமான காரணம், இந்திய அணியின் கோல் கீப்பர் ஸ்ரீ ஜேஷ்

தற்பொழுது 36 வயதாகும் ஸ்ரீஜெஸ், பிறந்த ஊர் கேரள மாநிலத்தின் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள கீழக்கம்பளம் பகுதி.

இருந்த போதிலும், அவர் வளர்ந்தது திருவண்ணாமலை மாவட்டத்தில் தான்.

ஸ்ரீஜேஷ், திருவண்ணாமலையில் தான் படித்து இருக்கிறார்.

இவரது விளையாட்டு திறமையை பாராட்டி, 2012 ஆம் ஆண்டு தமிழக அரசு கௌரவித்திருந்தது! எனக்கு இன்னும் நினைவிருக்கிறது.

இந்திய அணியின் வரலாற்றில் தவிர்க்க முடியாத கோல் கீப்பர்களுள் ஒருவராக, ஸ்ரீஜேஷ் விளங்குகிறார்.

அர்ஜுனா,கேல்ரத்னா உள்ளிட்ட பல விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, இன்று நடைபெற்ற போட்டியில் பிரிட்டனின் 10க்கும் மேற்பட்ட கோல் வாய்ப்புகளை நேர்த்தியாக கையாண்டு, இந்திய அணியின் வெற்றிக்கு வழிவகுத்து இருக்கிறார்.

இன்றைய ஆட்டத்தில் மட்டும் சில இன்ச் வித்தியாசத்தில், ஐந்திற்கும் அதிகமான கோல்களை தடுத்திருக்கிறார் ஸ்ரீஜேஷ்.

இதன் மூலம், பிரிட்டன் அணியிடம் இருந்து, வெற்றி வாய்ப்பை தட்டிபறித்து இருக்கிறது இந்தியா. இரண்டாவது முறையாக, தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிகளின் அரை இறுதிக்குள் நுழைகிறது இந்தியா அணி.

அது குறித்து பேட்டி அளித்த ஸ்ரீஜேஷ், இதுவே தன்னுடைய கடைசி போட்டியாக அமையும் என்று கருதியதாகவும், மிகவும் நேர்த்தியாக கையாண்டதால் வெற்றி பெற்றதாகவும் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி, வரவிருக்கும் அரை இறுதி போட்டியில் இந்திய அணி வெற்றி பெறும் பட்சத்தில் இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

மேலும் ஸ்ரீஜேஷ் இரண்டு போட்டிகளில் விளையாடுவார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஏற்கனவே 2021 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளிலேயே ஓய்வு பெற போவதாக அறிவித்திருந்த ஸ்ரீஜேஷ்; தனது கடைசி போட்டியாக பாரிஸ் ஒலிம்பிக்கில் விளையாடுகிறார்.

இந்தியாவில் பெருமளவில், ரசிகர்கள் கண்டுகொள்ளாத ஒரு விளையாட்டாகவே ஆக்கி உள்ளது.

இருந்த போதிலும் , தளராத தன்னம்பிக்கையோடு ஒரு வாழும் உதாரணமாக இந்திய ஹாக்கி வீரர்கள் திகழ்கிறார்கள்.

கிரிக்கெட் போட்டிகளை மட்டுமே பார்க்கும் ரசிகர்கள்! இனிமேலேனும், பிற விளையாட்டுக்களுக்கும் முன்னுரிமை அளித்தால்தான் ஒலிம்பிக்கில் பதக்க பட்டியலில் நம்மாலும்  ஜொலிக்க முடியும்.

# 10 கலைந்தது ஒலிம்பிக் கனவு (07/08/2024)




ஒலிம்பிக் போட்டிகளுக்கும் இந்தியாவுக்கும் ஏழாம் பொருத்தம் என்று, நான் முதலிலேயே கட்டுரைகளில் தெரிவித்து வருவது தான்.

நேற்றைய தினம், இரவு நடைபெற்ற இந்தியா மற்றும் ஜெர்மனி அணிகளுக்கு இடையேயான அரை இறுதி ஆக்கிப் போட்டியில்! இந்தியஅணி இரண்டுக்கு மூன்று(2-3) என்ற புள்ளிக்கணக்கில் போராடி தோல்வி அடைந்தது.

ஆனால், ஆறுதல் அளிக்கும் விதமாக மல்யுத்த போட்டியின் 50 கிலோ இடை பிரிவில் வீராங்கனை வினேஷ் போகத், கியூப நாட்டு வீராங்கனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

நிச்சயமாக அவருக்கு தங்கப்பதக்கம் கிடைக்கும்! என்று அனைவரும் ஆவலாக காத்திருந்தனர்.

ஆனால், அனைவரின் எதிர்பார்ப்பின் மேல் இடியாய் விழுந்திருக்கிறது! ஒலிம்பிக் கமிட்டியின் தகுதி நீக்க முடிவு.

வினேஷ் போகத்தின் எடையில் ஏற்பட்ட மாற்றத்தை தொடர்ந்து, அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். வழக்கமாக இருக்க வேண்டிய, 50 கிலோ கிராம் எடையை விடவும் சில கிராம்(100) அளவிற்கு எடை அதிகமாக இருப்பதாக ஒலிம்பிக் கூட்டமைப்பு விளக்கம் அளித்து இருக்கிறது.

இந்த தகுதி நீக்க முடிவால், இந்தியாவின் தங்கப் பதக்க கனவு மட்டும் அல்ல! வினேஷ் போகத் முழுவதுமாக தகுதி நீக்கமும் செய்யப்பட்டு இருக்கிறார்.

தொடர்ந்து இரண்டு ஒலிம்பிக் போட்டிகளாக ஏமாற்றத்தை சந்தித்து வந்த வினேஷ் போகத்தின் இதயத்தில், இடியாய் விழுந்திருக்கிறது இந்த முடிவு.

ஏற்கனவே, மல்யுத்த தொடர்பான சர்ச்சைகள் கடந்த ஆண்டு தலைப்புச் செய்திகளை நிறைத்திருந்தன.

இந்தியாவின் இறுதி நம்பிக்கையாக இருந்த, இவரும் வெளியேறி இருக்கிறார்.

நான் மிகவும் நம்பிய இரட்டை இலக்கத்தை, இந்த முறையும் இந்திய ஒலிம்பிக் அணியால் தொட முடியாது என்பது நிதர்சனமான உண்மையாக மாறி இருக்கிறது.

எது எப்படியோ! ஒலிம்பிக்கில் பங்கேற்ற அனைத்து இந்திய வீரர்களும் சாதனையாளர்கள் தான்.

உலகின் எண்ணில் அடங்காத பிரச்சினைகளையும், தன்னகத்தே கொண்டிருக்கும், ஒரு பரந்து விரிந்த! பாரத நாட்டின்! பறவைகளாய் பாரிஸ் நகரத்தை நிறைத்து இருக்கிறார்கள்.

இன்னும் சில வீரர்களுக்கான போட்டிகள் மீதம் இருக்கின்றன. மற்றும் இந்திய ஹாக்கி அணியின் வெண்கல பதக்க போட்டியும் மீதம் இருக்கிறது.

எனக்குத் தெரிந்தவரை, இந்த ஒலிம்பிக்கில் மட்டும் ஏழு தடவைக்கும் அதிகமாக, நான்காவது இடத்தில் இந்திய வீரர்கள் வெளியேறி இருக்கின்றனர்.

பதக்கப் பட்டியலில் இன்னும் சில பதக்கங்கள் கிடைக்கும் என்று நம்புவோம்.

# 11 வெண்கலத்தை சொந்தமாக்கியது இந்திய ஹாக்கி அணி!



பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் அரை இறுதிவரை முன்னேறி இருந்த, இந்தியா ஆக்கி அணி! அரை இறுதி ஆட்டத்தில் ஜெர்மனி அணியிடம் தோல்வி அடைந்தது.

இருந்த போதிலும், இறுதி நம்பிக்கையாக வெண்கல பதக்கத்திற்கான போட்டியில் ஸ்பெயின் அணியை எதிர்கொண்டது.



மிகவும் தீவிரமாக நடைபெற்ற இந்த போட்டியில், மிகவும் சிறப்பாக செயல்பட்ட இந்திய அணி இரண்டுக்கு ஒன்று ( 2-1) என்ற கோல் கணக்கில் வெண்கல பதக்கத்தை வென்றிருக்கிறது.

இந்தியா அணியின் “எல்லை காவலன்” என புகழப்படும் ஸ்ரீ ஜேஷ் அவர்களுக்கு இந்த போட்டி தான் கடைசி போட்டியாக அமையும் என தகவல் தெரிவிக்கிறது.

## 12 வெள்ளி வென்றார் நீராஜ் சோப்ரா! இறுதிக்கட்டத்தை எட்டியது ஒலிம்பிக்!



பாரிஸ் ஒலிம்பிக் போட்டி, தனது இறுதி நாட்களை நெருங்கி இருக்கிறது. அந்த வகையில், இந்தியாவிற்கான பதக்கப் வேட்கையில் மிகவும் முக்கிய இடத்தை பிடித்திருந்தவர் தான் ஈட்டி இருத்தல் வீரரான நிராஜ் சோப்ரா.
கடந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில், தங்கப்பதக்கம் வென்றிருந்த நீரஜ் சோப்ரா! இந்த முறையும் தங்கப்பதக்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

தகுதி சுற்று போட்டியில் அவர் முதலிடத்தை பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.




ஆனால், நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் அவரால் 79 மீட்டர்கள் வரை மட்டுமே ஈட்டி எறிய முடிந்தது.
புதுமுகமாக பாகிஸ்தானை சேர்ந்த ஈட்டி எறிதல் வீரர் நதீம், 82 மீட்டர்கள் வரை ஈட்டி எறிந்து ஒலிம்பிக் வரலாற்று சாதனையைப் படைத்திருக்கிறார்.
மேலும், பாகிஸ்தானிற்காக முதல் தனிநபர் தங்கப் பதக்கத்தையும் வென்று கொடுத்திருக்கிறார்.
பதக்க பட்டியலில் பாகிஸ்தான் வென்றிருக்கும் ஒரே பதக்கம் இதுவாகும்.
அடிப்படையில், நீரஜ் சோப்ராவும், நதீமும் நல்ல நண்பர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.
தங்கப்பதக்கம் வெல்ல முடியாவிட்டாலும், வெள்ளி பதக்கத்தை வென்று தனது திறமையை மீண்டும் பறைசாற்றி இருக்கிறார் நீரஜ் சோப்ரா.
இளம் வயது வீரராக டோக்கிய ஒலிம்பிக் இல் களம் கண்ட நீரஜ் சோப்ராவுக்கு ,இன்னும் அதிக காலம் போட்டிகளில் பங்கேற்க முடியும் என்பதால்! இன்னும் ஒன்று, இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் அவரை நாம் எதிர்பார்க்கலாம்.
அதையும் கடந்து ஒன்பதுக்கு மேற்பட்ட தருணங்களில்! இந்திய வீரர்கள் நான்காவது இடத்தை பிடித்து பதக்க வாய்ப்பை தவற விட்டு இருக்கின்றனர்.
அவர்கள் பதக்க வாய்ப்பை தவற விட்டு இருந்தாலும், இந்திய ரசிகர்களின் மனதில் நீங்காத இடத்தை பிடித்து விட்டனர்.
போட்டிகளை முடித்துவிட்டு இந்தியா திரும்பும் அனைத்து வீரர்களுக்கும் வாழ்த்தி வரவேற்போமாக!
வெற்றி-தோல்வி என்பது விளையாட்டில் மிகவும் சகஜம். அனைவராலும் பதக்கம் வென்று விட முடியாது! அவர்களின் நீடித்த முயற்சியை, இந்த 140 கோடி மக்களை முன்னிறுத்தும் விதமாக டோக்கியோ ஒலிம்பிக்கில்! தங்களால் இயன்ற

திறமையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் ஒருமுறை உற்சாகப்படுத்துவதே நாம் அளிக்கும் சிறந்த பரிசாக இருக்கும்.
இன்றோடு இந்திய வீரர்களுக்கான பெரும்பாலான விளையாட்டுப் போட்டிகள் நிறைவடையவிருக்கின்றன.
வெற்றி பெற்ற! பங்கெடுத்த!  அனைத்து நாடுகளை சேர்ந்த வீரர்களுக்கும் வாழ்த்துக்கள்!

# 13 அமன் ஷெராவத்

ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டியிலும், இந்தியாவிற்கு பதக்கம் பெற்று தருவதில் மல்யுத்த விளையாட்டுக்கு தனி பங்கு உண்டு.

ஆனால், 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள்! இந்திய மல்யுத்த வீரர்களுக்கு சாதகமாக அமையவில்லை.

இந்தியாவின் மல்யுத்த வீராங்கனை, வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டது! மிகுந்த சர்ச்சைகளுக்கு உள்ளானது.

மேலும், கடந்த முறை வெள்ளிப் பதக்கம் பெற்று தந்த ரவிக்குமார் தாஹியா போன்ற வீரர்கள் இம்முறை தகுதி பெறவில்லை.

இந்த அனைத்து குறைகளையும் தீர்த்து வை க்கும் விதமாக, ஒலிம்பிக் போட்டிகளில் மல்யுத்தத்தில் பதக்கம் வென்ற இந்திய வீரர் தான் “அமன் ஷெராவத்”.




மேலும், மிகக் குறைந்த வயதில் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்திய வீரர் எனும் சாதனையையும் படைத்திருக்கிறார் அவர்.

அதைத்தொடர்ந்து, புவேர்ட்டோ ரிக்கோ நாட்டு வீரரை வெண்கல பதக்க போட்டியில் எதிர்கொண்டார். இந்த போட்டியில், அதிக புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவன் இந்திய அணிக்காக வெண்கல பதக்கத்தை பெற்று தந்தார்.

வெறும் 22 வயதே ஆகும் அமன், வினேஷ் போகத் சந்தித்த அதே பிரச்சினையை சந்தித்தார். ஆம்! போட்டிக்கு சில மணி நேரம் முன்பாக, அவருடைய எடை ஒன்றரை கிலோகிராம் வரை அதிகரித்தது .ஆனால், தீவிரமாக பயிற்சி எடுத்து அந்த பிரச்சினையை சாமர்த்தியமாக கையாண்டார் அமன்.

இதன் மூலம், இந்திய அணிக்கு மல்யுத்தத்தில் பதக்கம் கிடைக்கவில்லை எனும் வேதனை தீர்ந்தது.

## 14 ஒலிம்பிக்கின் இறுதி வாரத் துணுக்குகள்

ஆகஸ்ட் 10 ஆம் தேதி எழுதப்பட்ட வார மீளாய்வு கட்டுரையில் இருந்து பெறப்பட்டது.

நமது கண்கள் நிச்சயமாக ஒலிம்பிக்கின் பக்கம் தான் திரும்பும். கிட்டத்தட்ட இன்றோடு இந்தியர்களுக்கான அனைத்து ஒலிம்பிக் ஆட்டங்களும் நிறைவு பெற்று இருக்கின்றன.

ஐந்து வெண்கல பதக்கங்கள் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தோடு இந்த ஒலிம்பிக் பயணத்தை நிறைவு செய்திருக்கிறது இந்திய அணி.

இந்திய ஹாக்கி அணியின் எல்லை காவலன் என புகழப்பட்ட ஶ்ரீ ஜெஸ் ஹாக்கி போட்டிகளில் இருந்து விடை பெறுவதாக அறிவித்திருக்கிறார்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய வீரர்களான பிவி சிந்து குத்துச்சண்டை வீராங்கனை லாவலின, டென்னிஸ் வீரர் ரோகன் போபண்ணா உள்ளிட்ட பல வீரர்களும் சோபிக்க தவறி இருக்கின்றனர்.

அதேநேரம், லக்ஷ்ன்ய சென், அர்ஜுன் பபூதா என பல முகங்கள் நான்காவது இடத்தை பெற்றிருப்பதை பார்க்க முடிகிறது.

என்னுடைய கணிப்பின்படி மட்டும், சுமார் பத்துக்கும் அதிகமான இந்திய வீரர்கள் முதல் ஐந்து இடங்களை பிடித்திருக்கின்றனர்.

அந்த வகையில் பதக்கத்திற்கு மிகவும் நெருங்கி வந்திருக்கின்றனர், இந்த வீரர்கள்.

தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட நீரஜ் சோப்ரா அந்த வாய்ப்பை பறி கொடுத்திருக்கிறார். அதேபோல, இந்த வாரத்தில் ஒலிம்பிக்கின் சர்ச்சைகளுக்கும் பஞ்சமில்லை. இந்திய மல்யுத்த வீராங்கனை ஆன வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டது மிகுந்த சர்ச்சைகளுக்கு வித்திட்டது.

மேலும் அமெரிக்காவை சேர்ந்த சறுக்கு மர விளையாட்டு வீரர் ஒருவர் இணையத்தில் பகிர்ந்த புகைப்படமும் சர்ச்சைக்கு வித்திட்டது. அதாவது, ஒலிம்பிக்கில் அவருக்கு வழங்கப்பட்ட வெண்கல பதக்கத்தின் தரம் மிகவும் மோசமாக இருந்ததாக குறிப்பிட்டு இருந்தார்.

# 15 கவனத்தை ஈர்த்த ஒலிம்பிக் வீரர்கள் : பகுதி 1

நடந்து முடிந்த பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில், பல வீரர்களும் சிறப்பாக செயல்பட்டு இருந்தனர்

ஆனால், ஒரு சில வீரர்கள் மட்டுமே அனைவருடைய கவனத்தையும் ஈர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தனர்.

அந்த வகையில் துப்பாக்கி சுடுதல் போட்டியில் என்னுடைய கவனத்தையும், மேலும் இணைய உலகத்தின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்த இரண்டு வீரர்கள் குறித்து முதலில் பார்க்கலாம்.

1.**yusuf dikec ( யூசுஃப் டிகெக்)**




Photo by Charles McQuillan/Getty Images)

துருக்கி நாட்டை சேர்ந்த 10 மீட்டர் ஏர் பிஸ்டல் துப்பாக்கி சுடுதல் வீரரான யூசுப்; அனைவரின் கவனத்தையும் ஈர்க்க தவறவில்லை.

10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவில், வெள்ளிப் பதக்கம் வென்றிருந்த யூசுப்புக்கு வயது 51.

பதக்கம் வென்றதற்கு பிறகாக, அனைவரிடமும் பேட்டியளித்த யூசுப்.இந்த பதக்கத்திற்கு பின்னால், மிகவும் எளிமையான கதை புதைந்திருக்கவில்லை. மாறாக, என்னுடைய 24 ஆண்டு கால கடின உழைப்பு! என்னை இன்றைக்கு பதக்கம் வெல்ல செய்திருக்கிறது என்று எளிமையாக கூறிச் சென்றார்.



Photo by Charles McQuillan/Getty Images)

உதாரணத்திற்கு குறிப்பிடப் போனால், இந்தியாவின் சார்பில் இதே கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கல பதக்கம் வென்ற பானு பாகர் மற்றும் சரப்ஜித்சிங் ஆகியோரின் வயதுகள் முறையே 22 மற்றும் 23 தான்.

பதக்கம் வென்ற இந்திய வீரர்களை விடவும், அனுபவ வயதில் மூத்தவரான யூசுப் ; தன்னுடைய துப்பாக்கிச் சூடும் தருணத்தில் மிகவும் எளிமையாக நடந்து கொண்டார்.




தன்னுடைய ஒரு கையில் துப்பாக்கி பிடித்துக் கொண்டு, மற்றொரு கையை கால் சட்டையின் பையில் சௌகரியமாக வைத்துக் கொண்டு! எளிமையாக இலக்குகளை நோக்கி சுட்டார்.

கண் பார்வைக்காக கண்ணாடி மட்டுமே அணிந்திருந்தார். அவரோடு ஒப்பிட போனால், பிற வீரர்கள் பெரும்பாலும் கவனச்சிதறலை தடுக்கும் சிறப்பு வகை கண்ணாடிகளை பயன்படுத்துவார்கள்.

மேலும் காதுகளில் கூட இயர் பிளக்(earplug) அணிந்து கொள்வார்கள்.

இவை எதுவும் இன்றி, மிகவும் எளிமையாக விளையாடி வெள்ளிப் பதக்கம் வென்ற யூசுப்புக்கு, இணையத்தில் தனி ரசிகர் பட்டாளமே உருவானது.

அடிப்படையில், துருக்கி நாட்டு ராணுவத்தில் பணியாற்றிய யூசுப்; ராணுவத்தில் இருக்கும்போதும் சரி! அதிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் சரி! அதிகப்படியான சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்று, துப்பாக்கி சுடுதலில் நிறைய பதக்கங்களை பெற்றிருக்கிறார்.

ஆனால், 51 வயதில் அவருடைய ஒலிம்பிக் கனவு நிறைவேறி இருக்கிறது.

ஒலிம்பிக்கிற்கு வயது ஒரு தடை இல்லை என்பதற்கு இவரும் ஒரு எடுத்துக்காட்டு தான்.

**2. kim yeji ( கிம் யேஜி)**



முன்பு யூசுப்பை குறிப்பிட்ட அதே பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவின் வீராங்கனை தான் கிம் யெஜி.

32 வயதான தென்கொரிய நாட்டு வீராங்கனையான கிம் யேஜி; 10 மீட்டர் துப்பாக்கி சுடுதலில், பல சாதனைகளை தன் வசம் வைத்திருக்கிறார். மேற்படி குறிப்பிட்ட, கலப்பு இரட்டையர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றதும் கிம் யேஜி தான். அதேபோல, பானு பாகர் தனிநபர் பிரிவில் 10 மீட்டர் ஏர் பிஸ்டலில்

வெண்கல பதக்கம் வென்றதை அறிந்திருப்பீர்கள். அதே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றது யேஜி தான்.




Photo by Charles McQuillan/Getty Images)

யூசுப்பை போலவே மிகவும் எளிமையாக கண்ணாடி மட்டும் அணிந்து கொண்டு, ஒரு கையை கால் சட்டை பையில் வைத்துக் கொண்டு, மற்றொரு கையால் துப்பாக்கியை பிடித்துக் கொண்டு, எளிமையாக துப்பாக்கிச் சுடுதலில் பதக்கங்களை அள்ளி குவித்த கிம் யேஜிக்கு என தனி ஒரு ரசிகர் பட்டாளமே இணையத்தில் உருவானது.


Photo by Charles McQuillan/Getty Images)

துப்பாக்கிச் சுடுதல் என்பது அடிப்படையில் கவனத்தோடு கையாள வேண்டிய ஒரு ஒலிம்பிக் விளையாட்டு. ஒரு சிறிய தவறு கூட புள்ளி பட்டியலில் முதலிடத்தில் இருப்பவரை, கடைசி இடத்திற்கு தள்ளி விடும்.

நாம் நினைப்பது போல முதலில் இருக்கும் வீரருக்கும், கடைசியில் இருக்கும் வீரருக்கும் பெரிய அளவில் எல்லாம் புள்ளி வித்தியாசம் இருக்காது.

இதனால் நீங்கள் இழக்கக்கூடிய ஒவ்வொரு புள்ளியும், உங்களது தோல்விக்கு வழி வகுத்து விடும்.

மேலும், ஒரு தவறான சுடுதல் உங்களது உளவியலை மிகவும் பாதிக்கும். ஆனால் அதை அனைத்தையும் எளிமையாக கருதி, விளையாட்டை விளையாட்டாக விளையாடிய இந்த இரண்டு வீரர்களும் ஒலிம்பிக்கில் எனது கவனத்தை ஈர்த்த முதன்மையான முகங்கள்.

# 16 கவனத்தை ஈர்த்த ஒலிம்பிக் வீரர்கள் பகுதி :2

1.**இமான் காலிஃப்**




2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் அல்ஜீரிய நாட்டை சேர்ந்த குத்துச்சண்டை வீராங்கனையான இமான் காலிஃப், தொடர்பான சர்ச்சைகள் இணைய உலகத்தை சுற்றி வந்தது.

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் போது இத்தாலியின் ஏஞ்சலினாவை, 25 வயதான இமான் காலிப் ஐ எதிர் கொண்டார். .இந்த போட்டியில் காலிஃப் வெற்றி பெற்றார்.

ஆனால், தோல்வியடைந்த இத்தாலிய நாட்டு வீராங்கனை காலிப் ஒரு பெண் அல்ல, அவருக்கு ஆண்களுக்கான எக்ஸ் ஒய் வகையிலான குரோமோசோம் இருக்கின்றன. எனவே அவருடைய வெற்றி செல்லாது என ஊடகங்களுக்கு முன்பு அறிவித்தார்.

அவருடைய இந்த கருத்து சர்ச்சையானது. மேலும் காலிப்ஃக்கு எதிராக, உலகின் மிக முக்கியமான நபர்கள் கூட கருத்து தெரிவித்திருந்தனர். குறிப்பாக, டெஸ்லா நிறுவனத்தின் உரிமையாளர் எலான் மஸ்க், பிரபலமான ஹரி பாட்டர் நாவலை எழுதிய ஜே கே ரௌலிங் போன்றோரும், எதிராக கருத்து தெரிவித்திருந்தது மேலும் சர்ச்சைக்கு வலுசேர்த்தது.

ஆனால், இமானே காலிப்புக்கு ஆதரவாக, ஒலிம்பிக் சங்கம் வந்து நின்றது .அவர் ஒரு பெண் தான் என்றும், அவர் மீது வைக்கப்பட்ட ஆண்களுக்கான எக்ஸ் ஒய் குரோமோசோம்கள் இருக்கிறது மற்றும் டெஸ்டோஸ்டிரோன் அதிக அளவில் இருக்கிறது! போன்ற குற்றச்சாட்டுகள் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்படவில்லை என்றும் சான்றளித்தது ஒலிம்பிக் கமிட்டி.

அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த போட்டிகளில் விளையாட அவர் அனுமதிக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து,இறுதிப் போட்டியில் சீன நாட்டு வீராங்கனை யாங் லீயோவை(yang leu)தோற்கடித்து தங்கப்பதக்கம் என்றார்.

கடும் எதிர்ப்புகளையும் கடந்து தங்கப்பதக்கம் வென்ற இமான் காலிஃப்பின் தைரியம் அனைவரையும் வெகுவாக ஈர்த்தது.

ஆனால், இன்றும் கூட இமான் காலிஃப்க்கு எதிரான கருத்துக்கள், இணையத்தில் உலா வருவதை கவனிக்க முடிகிறது.

2. **வினேஷ் போகத்**



காலிப் விவகாரத்தில் அவருக்கு ஆதரவாக நின்ற அதே ஒலிம்பிக் கமிட்டி தான்! வினேஷ் போகத்தின் பதக்க கனவிற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இந்தியாவின் தலைசிறந்த மல்யுத்த வீராங்கனை என அறியப்பட்ட வினேஷ் போகத், அரையிறுதி போட்டியில் வெற்றி பெற்றிருந்தார்.

இறுதிப் போட்டியில் மோதுவதற்கு முன்பாக எடை பரிசோதனையில் 100 கிராம் அதிகமாக இருந்ததற்காக அவர் தகுதி நீக்கம் செய்யப்படுவதாக ஒலிம்பிக் கமிட்டி அறிவித்தது.

இது தொடர்பாக விரிவாக இன்னொரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

ஏற்கனவே, மல்யுத்த வீராங்கனைகளுக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டில் வீதி வரை இறங்கிப் போராட்டம் நடத்திய வினேஷ் போகத்திற்கு, நிச்சயம் இந்த ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் கிடைக்கும் என பலரும் எதிர்பார்த்தனர்.ஆனால், அவரது பதக்கக் கனவை சிதைத்து விட்டது அந்த 100 கிராம் எடை அதிகரிப்பு.

நிச்சயம்! இறுதிப்போட்டியில் அவர் பங்கேற்று இருந்தால் பெரும்பாலும் தங்கப்பதக்கத்தை வென்றிருப்பார் என அனைவரும் எதிர்பார்த்தனர்.

தொடர்ந்து இரண்டு முறை மேல்முறையீடு செய்த போதிலும் ,அவரது மேல்முறையீடு அனைத்தையும் நிராகரித்துவிட்டது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி.

ஆனால், அவருக்கு ஆதரவாக சர்வதேச நாடுகளை சேர்ந்த பல விளையாட்டு வீரர்களும் கருத்து தெரிவித்திருந்தது கவனிக்க முடிகிறது.

இந்த இரு வேறு நிகழ்வுகளிலும்,ஒலிம்பிக் கமிட்டியின் மாறுபட்ட முடிவுகள் சர்ச்சைகளுக்கு வித்திடாமல் இல்லை.

# 17 கருவோடு களம் கண்ட நாடா ஹாபிஸ் ( NADA HAFEZ)





2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கவனத்தை ஈர்த்த, பல வீரர்கள் குறித்தும் பார்த்திருந்தோம்.

ஆனால், அனைவரது கவனத்தை ஈர்த்தது மட்டுமல்லாமல்! பெண்ணிற்கே உரிய வலிகளை உலகிற்கு எடுத்துச் சொன்ன! ஒரு வீராங்கனை தான் எகிப்து நாட்டை சேர்ந்த நாடா ஹாபிஸ்.

மூன்றாவது முறையாக ஒலிம்பிக் போட்டிகளில் களம் கண்ட 26 வயதான நாடா; அடிப்படையில் வாள் வீச்சு வீராங்கனை ஆவார்.

தகுதிச்சுற்று 16ல் (round of 16) அமெரிக்க வீராங்கனையை வீழ்த்தியிருந்த இவர்; காலிறுதி போட்டியில் கொரிய நாட்டு வீராங்கனை இடம் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

அதைத் தொடர்ந்து, அவர் இன்ஸ்டாகிராமில் பதிவிட்ட பதிவு உலகம் முழுவதும் கவனத்தை பெற்றது.



**1,38,894 விருப்பங்கள்**

**nada_hafez**

7 MONTHS PREGNANT OLYMPIAN !

What appears to you as two players on the podium, they were actually three! It was me, my competitor, & my yet-to-come to our world, little baby!
My baby & I had our fair share of challenges, be it both physical & emotional. The rollercoaster of pregnancy is tough on its own, but having to fight to keep the balance of life & sports was nothing short of strenuous, however worth it.
I'm writing this post to say that pride fills my being for securing my place in the round of 16!

I'm lucky to have shared the trust of my husband @ibrahimihab11 and that of my family to be able to come this far.

This specific Olympics was different; Three times *Olympian* but this time carrying a little Olympian one! ❤️

எல்லா 4,595 கருத்துகளையும் பாருங்கள்

அந்த பதிவில் , தான் ஏழு மாத கர்ப்பிணி எனவும், வாள்வீச்சு களத்தில், தான் மட்டும் தனியாக விளையாடவில்லை! என் குழந்தையும் என்னோடு சேர்ந்து ஒலிம்பிக்கில் களம் கண்டிருக்கிறது! என்று தெரிவித்து இருந்தார்.

உலகம் முழுவதும் உள்ள ஒலிம்பிக் ரசிகர்கள், நாடா ஹாபிஸ் ஐ பாராட்டி பதிவு மழை பொழிந்தனர்.

ஒலிம்பிக் வரலாற்றில் ஏழு மாத கர்ப்பிணியாக களம் கண்ட வீராங்கனை எனும் சிறப்பை பெற்றிருக்கிறார் ஹாபிஸ்.

தாய்மையும் தொடக்கமான கருப்பையில்!  கருவை சுமந்து கொண்டு வாள் வீச்சில் களம் கண்ட நாடா ஹாபிஸ் , பதக்கம் பெற விட்டாலும்! ஒலிம்பிக் ரசிகர்களின் மனங்களை வென்று விட்டார்.

பிறப்பதற்கு முன்பே, ஒலிம்பிக் களத்தில் களம் கண்ட பெருமையை அவரது குழந்தையும் பெற்றுவிட்டது.

ஒலிம்பிக் போட்டிகளில் சுவாரசியங்களுக்கும் பஞ்சம் இருக்காது.

## 18 தகுதி நீக்கம் செய்யப்பட்ட பராகுவே நாட்டு வீராங்கனை




2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட வீரர்கள் குறித்து சில கட்டுரைகளில் விவாதித்து இருந்தோம்.

ஆனால், அதில் மிகவும் குறிப்பிடும் இப்படியான ஒரு நிகழ்வு தான் பரகுவே நாட்டு நீச்சல் வீராங்கனை லுவான அலன்சோ(luana alanso) தகுதி நீக்கம் செய்யப்பட்ட நிகழ்வு.

தன்னுடைய நாட்டை முன்னிறுத்துவதற்கு பதிலாக, தான் அமெரிக்காவுக்காக பங்கேற்க விரும்புவதாக! ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.

மேலும், பயிற்சிகளில் பங்கேற்பதற்கு பதிலாக டிஸ்னி லேண்ட் போன்ற கேளிக்கை இடங்களுக்கு சென்று பொழுது போக்கி வந்ததாக அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இதை அடுத்து ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து லூனா தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

ஆனால், அதனோடு பிரச்சனை முடியவில்லை.

இந்த நிகழ்வை பதிவு செய்த பெரும்பாலான இந்திய ஊடகங்கள், குறிப்பாக தமிழக ஊடகங்கள் “மிகவும் அழகாக இருந்ததற்காக லூனா அலான்சோ தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக” அடிப்படை இல்லாத ஒரு தகவலை இணையமெங்கும் பரவ விட்டன.

மேலும், லூனா  நீச்சல் உடையில் இருக்கும் புகைப்படங்களை பரவ விட்டு புரளி கிளப்பியது இந்த ஊடகங்கள்.

உண்மை தகவலை அறிந்து கொள்ளாமல் முன்னிலை ஊடகங்கள் இவ்வாறு செய்தி வெளியிடுவது நிச்சயமாக தடுக்கப்பட வேண்டியது.

ஒலிம்பிக்களம் புரளிகளுக்கும் பஞ்சமில்லாமல் சென்று இருப்பதற்கு லூனா அலன்சோவின் கதையும் ஒரு எடுத்துக்காட்டு தான்.

# 19 இரஷ்யா இல்லாத ஒலிம்பிக் போட்டிகள்




நடந்து முடிந்த பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்ய நாட்டு வீரர்களுக்கு பங்கேற்க அனுமதி அளிக்கப்படவில்லை.

ஒலிம்பிக் போட்டிகளில் எப்பொழுதும் பதக்க பட்டியலில் முதல் ஐந்து இடங்களை பிடிக்கும் நாடுகளில் நிச்சயமாக ரஷ்யாவும் இருக்கும்.

ஆனால், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடுப்பு காரணமாக, சர்வதேச ஒலிம்பிக் அமைப்பானது ரஷ்யாவை ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து தடை செய்தது.

இதன் காரணமாக, ரஷ்யாவால் நேரடியாக ஒலிம்பிக் போட்டிகளின் பங்கு எடுக்க முடியவில்லை. ஆனால், ரஷ்யாவை சேர்ந்த சுமார் 20 வீரர்கள் மட்டுமே நடுநிலை

வீரர்கள்(AIN) எனும் அடையாளத்தோடு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றதை அறிய முடிகிறது.

கடந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் கூட ரஷ்யா, ரஷ்ய ஒலிம்பிக் கூட்டமைப்பு(ROC ) எனும் பெயர்யிலேயே பங்கேற்க அனுமதிக்கப்பட்டது.

தற்போதைய சூழலில் உக்ரின் போரின் காரணமாக ரஷ்யாவிற்கு முழுமையான தடை விதிக்கப்பட்டிருந்தது.

அதே நேரம், ரஷ்யாவை ஆதரித்த நாடான பெலாரஸ் நாட்டிற்கும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டிருந்தது.

அந்நாட்டை சேர்ந்த சில வீரர்களும் கூட, நடுநிலை வீரர்கள் எனும் அடையாளத்தோடு பங்கேற்றுக் கொண்டனர்.

ஆனால், அதே நேரம் காசா மீது போர் தொடுத்திருக்கும் இஸ்ரேலுக்கு தடை விதிக்கவில்லை எனும் குரலும் எழாமல் இல்லை.

எது எப்படி இருந்தாலும், ரஷ்யா பங்கேற்காத ஒரு ஒலிம்பிக் போட்டியாகவே நிறைவடைந்து இருக்கிறது! பாரிஸ் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகள்.

# 20 இறுதிவரை சென்ற இந்திய வீரர்கள்

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பல வீரர்களும் இறுதிவரை சென்று வெற்றி வாய்ப்பு இழந்ததை பார்த்திருந்தோம். அதில் குறிப்பிடத்தக்க இந்திய வீரர்கள் குறித்து பார்ப்போம்.

**லக்ஷண்ய *சென்***

இளம் வயது பேட்மிட்டன் வீரரான லக்சன்யா சென் அரை இறுதி போட்டி வரை, எவ்வித தோல்வியையும் காணாமல் முன்னேறி இருந்தார்.

அரை இறுதிப் போட்டியில் உலகின் முதல் தரநிலை வீரரான ஆக்செல்செனை(axelsan) எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியின் தொடக்க முதலே ஆதிக்கம் செலுத்தி வந்த லட்சன்யா சென், சில தவறுகளின் காரணமாக 2 செட்களிலும் தோல்வி அடைந்தார்.

அதைத்தொடர்ந்து, வெண்கல பதக்கத்திற்கு நடைபெற்ற போட்டியிலும் மலேசிய நாட்டு வீரரிடம் தோல்வியடைந்தார்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பேட்மிட்டனில் இருந்து, பதக்கம் எதுவும் இந்தியாவிற்கு கிடைக்கவில்லை ! என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இரண்டு முறை பதக்கம் வென்று தந்த பிவி சிந்து, கால்இறுதியோடு நடையை கட்டினார்.

**வில்வித்தை:-**

வில் வித்தையில் இந்திய கலப்பு இரட்டையரணி அரை இறுதி போட்டி வரை சென்றது. ஆனால், அந்த போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது. அதைத்தொடர்ந்து நடந்த, வெண்கல பதக்கத்திற்கான போட்டியிலும் போராடி தோல்வி அடைந்தது இந்திய அணி.

வில் வித்தையில் பதக்க கனவு என்பது இந்தியாவிற்கு பல ஆண்டுகளாக எட்டா கனியாகவே நீடித்து வருகிறது.

**துப்பாக்கி சுடுதல்**

இரண்டு பதக்கங்களை வென்று கொடுத்து பானுபாகர், 25 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் நான்காவது இடம் பெற்று மூன்றாவது பதக்கத்தை தவறவிட்டார்.

சிறப்பாக விளையாடி மயிரிழையில் பதக்க வாய்ப்பை இழந்த, துப்பாக்கி சூடுதல் வீரர் அர்ஜுன் பபூதா கண்கலங்கியபடி வெளியேறியது அனைவரையும் கவனிக்க வைத்தது.

பறக்கும் வட்டுகளை சுடும் துப்பாக்கிச் சூடுதல் பிரிவில் இந்திய கலப்பு இரட்டை அணி 44க்கு 43 எனும் கணக்கில், ஒரு புள்ளியில் சீன அணியிடம் வெண்கல பதக்கத்தை தவறவிட்டது.

**மீராபாய் ஷானு**

கடந்த முறை வெள்ளிப் பதக்கம் வென்றிருந்த மீராபாய் ஷானு, இந்த முறை பதக்க வாய்ப்பை நழுவ விட்டார்.

இந்த முறை அவர், நான்காவது இடத்தை பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மட்டுமல்ல, இந்தியா சார்பில் பங்கேற்ற பல வீரர்களும் மிக சொற்ப அளவிலான புள்ளி வித்தியாசத்தில் பதக்கம் பெறும் வாய்ப்புகளை தவற விட்டிருக்கின்றனர். இத்தகைய தவறுகளை திருத்திக் கொண்டு, அடுத்த முறை இந்தியா பதக்க பட்டியலில் புதிய உச்சத்தை அடைய வேண்டும்! என்பதே அனைவரது விருப்பமும்.

## 21 இனிதே நிறைவடைந்தது, ஒலிம்பிக்ஸ்! (12/08/2024)



2024 ஆம் ஆண்டு, பாரிஸ் நகரில் நடைபெற்று வந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நிறைவடைந்து இருக்கின்றன.

உலகில் உள்ள சுமார் 230 நாடுகள், பிராந்தியங்கள் மற்றும் ஒலிம்பிக் அமைப்புகள் பங்கேற்ற இந்த ஒலிம்பிக் போட்டியில், 40க்கும் மேற்பட்ட தங்கப் பதக்கங்களை வென்று அமெரிக்கா ஒலிம்பிக் அணி முதலிடத்தை பிடித்திருக்கிறது.

இரண்டாவது இடத்தை சீன ஒலிம்பிக் அணி பிடித்திருக்கிறது.

உலகளாவிய அளவில் சுமார் 11 ஆயிரம் வீரர்கள் வரை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கெடுத்தது குறிப்பிடத்தக்கது.

சுமார் இரண்டரை வார காலம் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில், 150 க்கும் அதிகமான வீரர்களோடு பங்கேற்ற இந்திய அணி ஒரு வெள்ளி, ஐந்து வெண்கல பதக்கங்களோடு பதக்க பட்டியலில் சுமார் 71வது இடத்தில் நிறைவு செய்திருக்கிறது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட, பல இந்திய வீரர்களும் சோபிக்க தவறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

எது எப்படி இருந்தாலும்! இந்த ஒலிம்பிக் போட்டிக்கு மத்தியில், உலகளாவிய அளவில் எண்ணிலடங்காத அரசியல் மாற்றங்கள் நடந்து முடிந்திருக்கின்றன.

வங்கதேச கலவரம் தொடங்கி இங்கிலாந்தில் எழுந்த இனவெறி பிரச்சனை, கமாஸ் தலைவர் கொலை செய்யப்பட்டது, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான போர் பதற்றம், உக்ரைன் படைகள் ரஷ்ய நிலைகளை தாக்கி அழித்தது, உள்ளிட்ட எண்ணில் அடங்காத உலக நிகழ்வுகள் இந்த குறிப்பிட்ட ஒலிம்பிக் நிகழ்வோடு இணைந்து நிறைவடைந்து இருக்கின்றன.

உலகம் முழுவதும் அமைதியை விரும்புவதே ஒலிம்பிக்கின் அடிப்படை நோக்கம். உலகின் அனைத்து வீரர்களையும் ஒரே நகருக்குள் அடக்கி, ஒற்றுமையின் விளையாட்டு எனும் அடிப்படையில் ஒலிம்பிக் நடைபெறுகிறது.

நேற்று இறுதி நிகழ்வாக, ஒலிம்பிக் கொடி இறக்கப்பட்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர மேயரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆம்! 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலஸ் நகரம் தான் நடத்துகிறது.

ஒலிம்பிக்கில் இருந்து நாம் நிறைய கற்க வேண்டியுள்ளது. ஒரு மிகப்பெரிய மக்கள் தொகையைக் கொண்டிருக்கக் கூடிய பறந்து விரிந்த இந்திய தேசம், பதக்க பட்டியலில் மிகவும் பின்தங்கி இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

உண்மையில் ஒலிம்பிக்கில் விளையாடப்படும் விளையாட்டுகளில், பெரும்பாலும் இந்தியர்கள் பங்கேற்பதில்லை.

அவ்வளவு ஏன்! அப்படி ஒரு விளையாட்டு இருக்கிறது? என்பது குறித்து கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு தெரிந்திருப்பதில்லை.

பள்ளி அளவிலேயே மாணவர்களுக்கு பயிற்சி அளித்து விளையாட்டு வீரர்களாக மாற்று திட்டங்கள் வகுக்குபட்டு கொண்டுதான் இருக்கிறது. ஆனால், இந்தியா போன்ற தேசத்தில் தங்களுக்கு பாதுகாப்பான வளையத்தை விட்டு வெளியே வர மக்கள் தயாராக இல்லை.

இன்றைக்கு துப்பாக்கிச் சுடுதலில் வெண்கல பதக்கம் என்று மனு பாக்கர் கொண்டாடப்படுகிறார்! அதேநேரம், தமிழகத்திலிருந்து துப்பாக்கிச் சுடுதலில் பங்கேற்ற வீராங்கனை இளவேனில் குறித்து யாரும் பேச தயாராக இல்லை.

ஆம்! ஒலிம்பிக்கில் நீங்கள் சாதித்தால் உங்களது கனவுகள் அனைத்தும் நிறைவேறும். ஆனால் அதே நேரம் , நீங்கள் தோற்றுப் போனால் உங்களைக் கண்டு கொள்ள யாரும் இருக்க மாட்டார்கள்.

இதுவே இந்த உலகத்தின் அச்சாணி. இது ஒலிம்பிக் போட்டிகளுக்கு மட்டுமல்ல, அனைத்திற்கும் பொருந்தும்.

எது எப்படி இருந்தாலும், விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க வேண்டிய கட்டாயத்தை மீண்டும்,மீண்டும் ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப் பட்டியல் நமக்கு உணர்த்துகிறது.

ஆனால் பதக்க பட்டியலையும் கடந்து, இதுவரை நான் பார்த்த நான்கு ஒலிம்பிக் போட்டிகளிலேயே!( 2012,2016,2021,2024) இந்த ஒலிம்பிக் போட்டியில் தான் ! இந்திய அணி மிகவும் சிறப்பாக செயல்பட்டுள்ளது என குறிப்பிடலாம்.

பெரும்பாலான போட்டிகளில் இந்திய வீரர்கள் சொற்ப அளவிலான புள்ளிகளிலேயே வெற்றி வாய்ப்பை பறிகொடுத்து இருக்கின்றனர்.

வரும் ஒலிம்பிக் தொடர்களில் இந்தியாவின் பயணம் சிறப்பாக இருக்கும்,என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆனால், ஒலிம்பிக் வீரர்கள் அரசியலுக்கு பயன்படுத்தப்படுவார்கள்! என்பது சரியான அணுகுமுறையாக அமையாது.

எது எப்படியோ! என்னுடைய சிறப்பு கட்டுரை பகுதியில் ஒலிம்பிக் குறித்த இறுதி கட்டுரை இன்று.

இனி நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் அடுத்த லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் குறித்து கட்டுரை எழுதுவேன், என்று நம்புகிறேன். ஆனால், அது என்னுடைய வலைதளத்தோடு நின்று விடாது. அதிகப்படியான மக்களை சென்று சேரும் ஒரு இடத்தில் எனது கட்டுரைகள் வெளியாகும் என்று நம்புகிறேன்.

# 22 இந்தியாவால் ஒலிம்பிக் போட்டியை நடத்த முடியுமா?




2024 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் வெற்றிகரமாக பாரிஸ் நகரில் நடந்து முடிந்திருக்கின்றன.

2028 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் நடத்தவிருக்கிறது.

2032 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகளை ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பன் நகரம் நடத்தவிருக்கிறது.

2036 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு இந்தியா விருப்பத்தை தெரிவித்து இருக்கிறது. சுதந்திர தினத்தன்று நாட்டு மக்களிடையே உரையாற்றிய! இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா 2036 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் என தெரிவித்திருந்தார்.

இருந்த போதிலும், ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான கூட்டத்தில் கலந்துகொண்டு, இந்தியா அந்த ஏலத்தில் வெற்றி பெற வேண்டும்.

அவ்வாறு வெற்றி பெரும்பட்சத்தில், இந்தியாவில் இருக்கக்கூடிய ஏதாவது ஒரு நகரில் வைத்து ஒலிம்பிக் போட்டிகளை நடத்த முடியும்.

ஒரு வகையில் அகமதாபாத்தில் வைத்து நடத்தப்படலாம் என யூகங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், சென்னை அல்லது ஒடிசாவில் வைத்துக் கூட ஒலிம்பிக் போட்டிகளை நடத்த முடியும் என்பது சிலருடைய கருத்து.

எது எப்படி இருந்தாலும்! அதற்கான ஏலத்தில் முதலில் இந்தியா வெற்றி பெற வேண்டும். அதில் வெற்றி பெறும் பட்சத்திலும் கூட, பெரும்பாலான போட்டிகள் குறித்த அடிப்படைக் கட்டமைப்புகள் இந்தியாவில் கிடையாது.

அவை அனைத்தையும் சரி செய்வதற்கு ஒரு தசாப்தம் மட்டுமே நேரம் இருக்கும். அதற்குள்ளாக அனைத்தையும் செய்தால், இந்தியா நிச்சயமாக வெற்றிகரமாக தாய் மண்ணில் 2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்திக் காட்ட முடியும்.

நம்புவோம்! இந்தியாவும் ஒரு நாள் ஒலிம்பிக்கை நடத்தும் என்று!

# 23 *பாரா ஒலிம்பிக்கின் கதை*




ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணையாக மாற்றுத்திறனாளிகளுக்கும் வாய்ப்பு அளிக்கும் விதமாக பாரா ஒலிம்பிக் போட்டிகள், இரண்டாம் உலக போருக்கு பின்னர் 1948 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது.

இதில், உலகளாவிய நாடுகளை சேர்ந்து மாற்றுத்திறன் கொண்ட வீரர்கள் பல்வேறு பிரிவுகளின் கீழ் கலந்து கொள்கின்றனர்.

பார்வை திறன் குறைபாடு, தண்டுவட குறைபாடு, போலியோ பாதிப்பு, குள்ளத்தன்மை மற்றும் இன்ன பிற குறைபாடுகள் என பல பிரிவுகள் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் காணப்படுகிறது.

சில நேரங்களில் ,தவறான தகவல்களை அளித்து பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள்! எனும் குற்றச்சாட்டும் ஏற்படாமல் இல்லை.

ஆனால், இவை அனைத்தையும் கடந்து சர்வதேச பாரா ஒலிம்பிக் கமிட்டி வெற்றிகரமாக இந்த போட்டிகளை நடத்தி வருகிறது.

இந்த முறை, இந்தியா சார்பில் எண்பத்தி எட்டு வீரர்கள் பங்கேற்று இருக்கின்றனர்.

உலகளாவிய அளவில் ஆயிரக்கணக்கான வீரர்கள் பங்கெடுத்து இருக்கின்றனர்.

மாற்று திறனாளிகளையும் கொண்டாடும் பாரா ஒலிம்பிக் போட்டிகளுக்கு! மக்கள் ஆதரவு அளித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஒலிம்பிக் போட்டிகளுக்கு இருக்கும் ஆதரவு! பாரா ஒலிம்பிக் போட்டிகளுக்கு காணப்படுவதில்லை என்பது நிதர்சனம்.

## 24 *பதக்க வேட்டையில் கலக்கிய இந்திய பாரா ஒலிம்பிக் அணி* (30/08/2024)



ஒலிம்பிக் போட்டிகள் குறித்து தொடர்ந்து இருபது கட்டுரைகள் ஆவது எழுதி இருப்பேன்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் எதிர்ப் பார்த்த அளவுக்கு இந்திய அனுப்பி வெற்றி கிடைக்கவில்லை, என வேதனைப்பட்டவர்களில் எனக்கு முக்கிய இடம் உண்டு.

அந்த நிகழ்வுகளை நாம் மறந்து கடந்து சென்று விட்டோம். ஆனால், தற்பொழுது அதே பாரிஸ் நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வருகிறது.

ஆனால், இந்த போட்டியில் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விதமாக இந்திய வீரர்கள் ஒரே நாளில் நான்கு பதக்கங்களை வென்றிருக்கின்றனர்.

துப்பாக்கி சுடுதலில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் தடகளத்தில் ஒரு வெண்கலம் உட்பட நான்கு பதக்கங்கள் இந்திய அணிக்கு கிடைத்திருக்கிறது.

பாரா ஒலிம்பிக்ஸ் போட்டிகள் என்பது குறைபாடுகளையும் கடந்து, மாற்றுத்திறனாளிகள் உலகளாவிய அளவில் தங்களை நிலைநிறுத்த, அவர்களுக்கான  அங்கீகாரத்தை வழங்க நடத்தப்படும் ஒரு ஆகச் சிறந்த விளையாட்டு ஆகும்.

தங்கள் குறைபாடுகளையும் கடந்து, தங்கள் தேசத்தை முன்னுறுத்தும் விதமாக பாரா ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் பங்கேற்கும், உலகின் அனைத்து நாடுகளின் வீரர்களும் உண்மையில் சாதனையாளர்கள் தான்.

சிறு காயத்தை கூட தாங்கிக் கொள்ள முடியாத நம்மால், இன்றளவும் கூட மாற்று திறனாளிகளை ஏளனமாக பார்க்கும் எண்ணம் குறைந்ததாக தெரியவில்லை.

ஆனால், தங்களது குறைபாடுகளை மறந்து சாதனையாளர்களாக மாறி இருக்கும் இவர்களுக்கு தலை வணங்க வேண்டியது நமது கடமை.

இவர்கள் குறித்து தகவல்களை தொடர்ந்து ஊடகங்கள் வெளியிட வேண்டும்.அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்க வேண்டும்! என்பதுதான் என்னுடைய ஆசை.

பாரா ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் ஆவது, இந்திய அணி முதல் 10 இடங்களுக்குள் பதக்க பட்டியலில் இடம் பிடிக்கும் என்று நம்புகிறேன்.

## 25 நான்கு வீரர்கள், நான்கு சூழல்கள்! (31/08/2024)




நேற்றைய கட்டுரையில், ஒரே நாளில் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய அணி 4 பதக்கங்களை வென்று இருந்ததாக குறிப்பிட்டு இருந்தேன்.

பதக்கம் வென்ற மூன்று வீராங்கனைகள் மற்றும் ஒரு வீரர் குறித்த வாழ்க்கை குறிப்புகளை படிக்கும் வாய்ப்பு இன்று கிடைத்தது, அப்பொழுதுதான் உழைப்பு என்பதன் அடியாளத்தை உணர முடிகிறது.

ஒவ்வொரு வீரராக அவர்களுடைய வாழ்க்கை கதையை பார்த்து விடலாம்.

**தங்கப் பதக்கம் வென்ற அவனி (Avani Lekhara)**

துப்பாக்கி சுடிதல் பிரிவில் நேற்று இந்தியாவிற்கு இரண்டு பதக்கங்கள் கிடைத்தது. அதில் தங்கப் பதக்கத்தோடு, இந்தியாவின் வெற்றி கணக்கை தொடங்கி வைத்ததில் “அவனி”க்கு மிக முக்கிய பங்கு உள்ளது.

அடிப்படையில் எழுந்து கூட நிற்க முடியாத அளவுக்கு, முதுகு தண்டுவடத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளால் தவித்து தருபவர் தான் அவனி.

தன்னுடைய பதினோராவது வயதில் ஏற்பட்ட கார் விபத்தில், அவருடைய முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டது. பல விளையாட்டுப் போட்டிகளையும் முயற்சி செய்த போதிலும், இறுதியாக துப்பாக்கி சுடுதலில் களமிறங்கி பாரா ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் தங்க மங்கையாக ஜொலித்திருக்கிறார் அவனி.

இந்தியா சார்பில் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்ற முதல் பெண் வீராங்கனை இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

குறைபாடுகள் ஒரு மனிதனை ஒருபோதும் துவண்டு போகச் செய்து விடக்கூடாது! என்பதற்கு அவனை ஒரு சிறந்த சாட்சி.

**2. துப்பாக்கி சுடுதலில் வெண்கலம் வென்ற மோனா**

அவனி தங்க பதக்கம் வென்ற அதே ரைப்பில் பிரிவில் தான் மோனா அகர்வாலும் வெண்கல பதக்கம் வென்றிருந்தார்.

அவனியின் கதையைக் காட்டிலும் மோனா வின் கதை இன்னும் சோகங்கள் நிறைந்தது.

சிறுவயதிலேயே போலியோவால் பாதிக்கப்பட்ட, மோனாவின் வாழ்க்கை பெரும்பாலும் சக்கர நாற்காலிகிலேயே கழிந்தது.

மேலும், இரண்டு குழந்தைகளுக்கு தாயான மோனா சந்திக்காத பிரச்சினைகள் இல்லை.

குடும்பமும்,சமூகமும் தொடர்ந்து குத்தி குத்தி அதிலிருந்து எழுந்து விட முடியாதா? என போனால் தேர்ந்தெடுத்த வழி தான் துப்பாக்கி சுடுதல்.

தன்னை நோக்கி வார்த்தைகளால் சுட்டவர்களுக்கு, தன்னுடைய ஒலிம்பிக் துப்பாக்கியால் பதிலடி கொடுத்திருக்கிறார் மோனா.

உடலளவில் மட்டுமல்ல, மனதளவிலும் பல கஷ்டங்களை சந்தித்தாலும்! ஒரு மனிதன் வெற்றி பெற தகுதியானவரே என்பதற்கு மோனா சிறந்த சாட்சி.

**3. துப்பாக்கி சுடுதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற மனிஷ் நர்வால**

10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் வெள்ளி பதக்கம் வென்ற, மனிஷ் கதையும் சோகங்கள் நிறைந்தது தான்.

மனிஷ் உடைய வெற்றிகளுக்கு பக்கபலமாக இருந்த, அவரது சகோதரர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சாலை விபத்தில் உயிரிழந்திருக்கிறார்.

அதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளான மனிஷ், தன்னுடைய சகோதரருக்காக இந்த வெற்றியை சமர்ப்பிப்பதாக தெரிவித்திருக்கிறார்.

உடல் ஊனம் என்பதையும் கடந்து உளவியல் ரீதியாகவும் பல பிரச்சனைகள் மணிசை வாட்டி இருப்பதை அறிய முடிகிறது.

இருந்த போதிலும், மன உளைச்சல்களுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக அவரது சாதனையாய் மின்னுகிறது! இந்தியாவிற்காக அவர் சம்பாதித்துக் கொடுத்து வெள்ளி பதக்கம்.

### *4. தடகளத்தில் பதக்கம் வென்ற பிரீத்தி பால்*

சிறுவயதிலேயே எழுந்து நடப்பதில் பிரச்சனை!மிகவும் பலகீனமான கால்கள்! உட்பட பல பிரச்சினைகளை கடந்து, உத்திரபிரதேசத்தில் இருந்து தடகளத்தில் வெண்கலம் என்று இருக்கும் “ப்ரீத்தி பா(ல்)”லின் கதையும் சோகங்கள் நிறைந்தது தான்.

சிறுவயதில் உடல் ஊனத்தால் அதிகப்படியான வேதனைகளை சந்தித்திருக்கிறார் ப்ரீத்தி.

இருந்த போதிலும் தன்னுடைய வெற்றிக்கு ஒருபோதும் ஊனம் ஒரு தடையாக அமைந்துவிடக் கூடாது என்று நினைத்து சாதித்திருக்கிறார்.

ஒலிம்பிக்கை(common) பொறுத்தவரை, தடகளத்தில் நீரஜ் சோப்ராவை தவிர இதுவரை யாரும் இந்திய அணி சார்பில் பதக்கம் வென்றது கிடையாது.

ஆனால் உடல் ஊனத்தையும் கடந்து, பாரா ஒலிம்பிக் போட்டிகளில் தடகளத்தில் பதக்கம் வந்திருக்கிறார் ப்ரீத்தி பால்.

இந்த கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போதே பெண்கள் பிரிவில் துப்பாக்கி சுடுதலில் பிரான்சிஸ் வெண்கல பதக்கம் வென்று இருந்ததாகவும் படித்திருந்தேன்.

இது நான்கு வீரர்களின் வாழ்வும் நமக்கு எடுத்துக் கூறுவது, தோல்வியை கண்டு துவண்டு படுத்து விடுவதால் எதுவும் கிடைக்காது!

மாறாக தன்னிடம் இருக்கும் ஏதோ ஒரு திறமையை வெளிக்காட்டுவதால,  இந்த உலகத்தின் முன்னால் தலை நிமிர்ந்து வாழலாம் என்பதை.

உடலளவில் நன்றாக இருக்கும் மனிதர்கள் கூட செயலளவில் சாதிக்க விரும்பாத இந்த காலத்தில், உடல் ஊனத்தையும் கடந்து!  பிறரது நாவில் இருந்து வரும் வசை பாடல்களையும் கடந்து! இன்றைக்கு வெற்றி எழும் கனியை இவர்கள் ருசித்து இருக்கிறார்கள்.

வழக்கம் போல, இந்த நான்கு வீரர்கள் மட்டுமல்ல பாரா ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற மற்றும் மாற்றுப் திறனாளியாக இருந்து வாழ்வில் முன்னேற துடிக்கும் ஒவ்வொருவரும் சாதனையாளர்களே.

## 26 தொடரும் பதக்க மழை (02/09/2024)




பாரிஸ் நகரில் நடைபெற்று வரும் பேரா ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து இந்திய அணி பதக்க மழைகளை குவித்து வருகிறது

தற்பொழுது வரை இந்தியா 11-க்கும் அதிகமான பதக்கங்களை வென்றிருக்கிறது

தமிழகத்தின் சேர்ந்த வீராங்கனை மயிர் இலையில் தங்கப்பதக்கத்தை தவற விட்டிருக்கிறார்.

## 27 மூன்றாவது முறையாக பதக்கம் வென்றார் மாரியப்பன் தங்கவேலு (04/09/2024)

2016 ரியோ டிஜெனரோ பாரா ஒலிம்பிக் போட்டிகள், 2021 டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டிகள் என தொடர்ந்து இரண்டு பாரா ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்று சாதனை படைத்து நம் அனைவருக்கும் பரிச்சயமான முகமாக இருந்தவர் மாரியப்பன் தங்கவேலு



.

தற்போது 2024 ஆம் ஆண்டு பாரிஸ் பாரா ஒலிம்பிக் போட்டிகளிலும் வெண்கல பதக்கம் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்திருக்கிறார் மாரியப்பன் தங்கவேலு.

ஒரு எளிமையான வறுமை நிறைந்த பின்புலத்திலிருந்து வந்து இத்தகைய சாதனையை புரிந்து இருக்கும் மாரியப்பன் தங்கவேலுவிற்கு நாம் வழங்கும் பாராட்டுக்கள் போதாது.

நான் விரைவில் வெளியிட இருக்கும் ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பான புத்தகத்தில் நிச்சயமாக மாரியப்பன் தங்கவேலு குறித்து ஒரு விரிவான கட்டுரை இடம் பெற்று இருக்கும் என்று நம்புகிறேன்.

## 28 இரண்டாவது முறை பதக்கம் வென்ற பாரா ஒலிம்பிக் நாயகர்கள்

1. **பிரவீன் குமார்**

பாரா தடகளம் உயரம் தாண்டுதல் டி 64 இறுதிச் சுற்றில், 2.8 மீட்டர் உயரம் தாண்டி தங்கம் பதக்கம் வென்றவர்.

கடந்து டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டிகளிலும், வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கிறார்.

தமிழ்நாட்டின் மாரியப்பன் தங்கவேலுக்கு பிறகு ,பாரா ஒலிம்பிக் உயரம் தாண்டுதலில் தங்கம் வென்ற இரண்டாவது இந்திய வீரர் ஆவார்.

2. **நவ்தீப் சிங்**

பாரா தடகளம் ஈட்டி எறிதல் எப் 41 பிரிவில் தங்கம் வென்று இருக்கிறார். தொடக்கத்தில் வெள்ளிப் பதக்கம் வென்று இருந்த இவர்; ஈரான் நாட்டு வீரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டதால் தங்கப் பதக்கத்திற்கு மாற்றப்பட்டார்.

3. **மனிஷ் நர்வால்**

பாரா ஒலிம்பிக்கில் ஆடவர் துப்பாக்கிச் சூடுதல் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் எஸ் எல் 11 பிரிவின் இறுதிச்சுற்றில் 235 புள்ளிகள் பெற்று, வெள்ளிப் பதக்கத்தை வென்றிருக்கிறார். இவர், கடந்த டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்று இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

4. **நிஷாத் குமார்**

ஆடவர் உயரம் தாண்டுதல் டி 47 பிரிவில், வெள்ளிப் பதக்கம் வென்றதன் மூலம் நிஷாத் குமார் தனித்துவமான திறமையை வெளிப்படுத்தி இருக்கிறார்

இந்த போட்டியில், 2.04 மீட்டர் உயரத்தை தாண்டி பதக்கமின்றி இருக்கிறார். இவர் ,டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டிகளிலும் வெள்ளி பதக்கம் வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

5. **சுஹஸ் எத்திராஜ்**

கர்நாடக மாநிலத்தில் ஐஏஎஸ் அதிகாரியாக பணியாற்றி வரும் சுகாஸ், இந்த பாரா ஒலிம்பிக் போட்டிகளில் தன்னுடைய இரண்டாவது பதக்கத்தை

பெற்றிருக்கிறார். பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில், எஸ் எல் 4 பிரான்ச் வீரரிடம் தோல்வி அடைந்ததன் மூலம் வெள்ளிப் பதக்கம் கிடைத்திருக்கிறது.

6. **யோகேஷ் கதுனியா**

பாரா தடகளம் ஆடவர் வட்டறிதல் எஃப் 56 பிரிவில், இந்தியாவின் சார்பில் பங்கேற்ற இவர் 42.22 மீட்டர் வட்டு எரிந்து வெள்ளிப் பதக்கத்தை வென்று இருக்கிறார். இதே போலz டோக்கியோ ஒலிம்பிக்கிலும் வெள்ளி பதக்கம் வென்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அதிக தூரம் வட்டு எறிந்ததற்கான 45.18 மீட்டர் சாதனையை இவர் தற்போது வரை வைத்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

6. **சரத்குமார்**

ஆடவர் உயரம் தாண்டுதல் டி 63 பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை கொண்டு இருக்கக்கூடிய இவர். 1.88 மீட்டர் உயரம் தாண்டியது குறிப்பிடத்தக்கது! இவரோடு சேர்த்து தான், இதே பிரிவில் மாரியப்பன் தங்கவேலுவும் வெண்கல பதக்கம் கொண்டிருந்தார்.

7. **பிரீத்தி பால்**

மகளிர் 100 மீட்டர் டி35 ஓட்டப்பந்தயத்தில் இந்திய வீராங்கனை பிரீத்தி வெண்கலம் என்று அசத்தியிருக்கிறார். 100மீட்டர் தூரத்தை 14.21 வினாடிகளில் கடந்து மூன்றாவது இடத்தை பிடித்திருந்தார்

இதே போல, 200 மீட்டர் டி 35 ஓட்ட பிரிவில் 30.03 வினாடிகளில் கடந்து வெண்கல பதக்கம் கைப்பற்றினார். இதன் மூலம், ஒரே பாரா ஒலிம்பிக் தொடரில் இரண்டு பதக்கங்களை வென்ற வீராங்கனை எனும் சாதனையை படைத்திருக்கிறார்.

8. **சுந்தர் சிங் குர்ஜார்**

ஆடவர் தடகளம் ஈட்டி எறிதல் எப் 46 பிரிவில் 64.96 மீட்டர் இருந்து வெண்கல பதக்கத்தை வென்றிருக்கிறார்.டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டிகளிலும், இவர் வெண்கல பதக்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

மேற்படி இந்த கட்டுரைக்கு மட்டும் இந்து தமிழ் நாளிதழில் வெளியான கட்டுரையை மாதிரியாக கொண்டு எழுதி இருக்கிறேன்.

# 29 பதக்க பட்டியல் – பாரா ஒலிம்பிக்ஸ்

2024 ஆம் ஆண்டு பாரிஸ் பாரா ஒலிம்பிக் போட்டியில், இந்தியா சார்பில் 88 வீரர்கள் கலந்து கொண்டனர். அதில் 25 க்கும் அதிகமான வீரர்கள் பதக்கம் வென்று இருந்தனர். அந்த பட்டியல் கீழே வழங்க பட்டுள்ளது.

மொத்த பதக்கங்களின் எண்ணிக்கை : 29

1
அவனி லேகாரா ,
துப்பாக்கி சுடுதல்
பெண்கள் 10m  நின்றநிலை ரிஃபிள் SH1,
தங்க பதக்கம்

2
மோனா அகர்வால்,
துப்பாக்கி சுடுதல்
பெண்கள் 10m  நின்றநிலை ரிஃபிள் SH1,

வெண்கலம்
3
பிரீத்தி பால்,
தடகளம்,
பெண்கள் 100m T35
வெண்கலம்

4
மனிஷ் நார்வால்,
துப்பாக்கி சுடுதல்
ஆண்கள் 10m air பிஸ்டல் SH1
வெள்ளி பதக்கம்.

5

ருபின பிரான்சிஸ்
துப்பாக்கி சுடுதல்
பெண்கள் 10m air பிஸ்டல் SH1
வெண்கலம்

6
பிரீத்தி பால்
தடகளம்
பெண்கள் 200m T35
வெண்கலம்

7
நிஷாட் குமார்
தடகளம்  T47
வெள்ளி

8
யோகேஷ் கதுனியா
தடகள
ஆண்களுக்கான வட்டு எறிதல் F56
வெள்ளி

9
நிதேஷ் குமார்
பூப்பந்து
ஆண்கள் ஒற்றையர் SL3
தங்கம்

10
துளசிமதி முருகேசன்
பூப்பந்து
பெண்கள் ஒற்றையர் SU5
வெள்ளி

11
மனிஷா ராமதாஸ்
பூப்பந்து

பெண்கள் ஒற்றையர் SU5
வெண்கலம்

12
சுஹாஸ் யதிராஜ்
பூப்பந்து
ஆண்கள் ஒற்றையர் SL4
வெள்ளி

13
ராகேஷ் குமார் / ஷீத்தல் தேவி
வில்வித்தை
கலப்பு அணி கலவை திறந்தது
வெண்கலம்

14
சுமித் ஆன்டில்
தடகள
ஈட்டி எறிதல் F64
தங்கம்

15
நித்யா ஸ்ரீ சிவன்
பூப்பந்து
பெண்கள் ஒற்றையர் SH6
வெண்கலம்

16
தீப்தி ஜீவன்ஜி
தடகள
பெண்கள் 400 மீ டி20
வெண்கலம்

17
மாரியப்பன் தங்கவேலு
தடகள

ஆண்களுக்கான உயரம் தாண்டுதல் T63
வெண்கலம்

18
சரத் குமார்
தடகள
ஆண்களுக்கான உயரம் தாண்டுதல் T63
வெள்ளி

19
அஜீத் சிங்
தடகள
ஆண்களுக்கான ஈட்டி எறிதல் F46
வெள்ளி

20
சுந்தர் சிங் குர்ஜார்
தடகள
ஆண்களுக்கான ஈட்டி எறிதல் F46
வெண்கலம்

21
சச்சின் கிலாரி
தடகள
ஆண்களுக்கான குண்டு எறிதல் F46
வெள்ளி

22
ஹர்விந்தர் சிங்
வில்வித்தை
ஆண்களின் தனிப்பட்ட ரிகர்வ் ஓபன்
தங்கம்

23
தரம்பிர்
தடகள

ஆண்கள் கிளப் எப்51 வீசுதல்
தங்கம்

24
பர்னவ் சூர்மா
தடகள
ஆண்கள் கிளப் எப்51 வீசுதல்
வெள்ளி

25
கபில் பர்மர்
ஜூடோ
ஆண்கள் -60 கிலோ ஜே1
வெண்கலம்

26
பிரவீன் குமார்
தடகள
ஆண்கள் உயரம் தாண்டுதல் T64
தங்கம்

27
Hokato Hotozhe Sema
தடகள
ஆண்களுக்கான ஷாட் புட் F57
வெண்கலம்

28
சிம்ரன்
தடகள
பெண்களுக்கான 200மீ டி12
வெண்கலம்

29
நவ்தீப் சிங்

தடகள
ஆண்களுக்கான ஈட்டி எறிதல் F41

பாரா ஒலிம்பிக் வீரர்களுக்கு நிதி உதவிகளை மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

பாரா ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற வீரர்களுக்கு ரூபாய் 75 லட்சமும், வெள்ளிப் பதக்கம் வென்ற வீரர்களுக்கு ரூபாய் 50 லட்சம் மற்றும் வெண்கல பதக்கம் என்ற வீரர்களுக்கு தலா 30 லட்சம் பரிசு தொகையாக வழங்கப்படும்! என மத்திய விளையாட்டு துறை அமைச்சர்  தெரிவித்திருக்கிறார்.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டிகளில் வெறும் நான்கு பதக்கங்களை மட்டுமே வென்றிருந்த இந்திய பாரா ஒலிம்பிக் அணி. இந்த 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 29 பதக்கங்களை வென்றிருக்கிறது.

எனவே வரவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்களை எதிர்பார்க்கலாம்.

## 30 *நிறைவடைந்தது பாரா ஒலிம்பிக் போட்டிகள்* (09/09/2024)

பாரிஸ் நகரில் கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த மாதம் நடைபெற்றது குறித்து, நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அதன் தொடர்ச்சியாக மாற்றுத்திறனாளிகளுக்கான, பாரா ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸ் நகரில் நடைபெற்று வந்தது.

பத்து நாட்கள் வரை நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டிகள், நேற்று (8 செப்டம்பர் 2024 அன்று) நிறைவடைந்தது.

மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை வெளிக் கொணரும் விதமாக, உலகளாவிய அளவில் இருக்கும் போட்டியாளர்களை ஒரு நகருக்குள் ஒருங்கிணைத்து! அவர்களுக்காக நடத்தப்படும் விளையாட்டு தான் பாரா ஒலிம்பிக் போட்டிகள்.

நடந்து முடிந்த பாரா ஒலிம்பிக் போட்டிகளில் 200 க்கும் மேற்பட்ட பதக்கங்களை உண்டு சீன அணி முதலிடத்தை பிடித்திருக்கிறது.

ஆனால், கோடைகால ஒலிம்பிக் போட்டிகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் பாரா ஒலிம்பிக் போட்டிகளுக்கு வழங்கப்படுவதில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

எது எப்படி இருந்தாலும்! சாதனையாளர்களுக்கு உடல் ஊனம் ஒன்றும் தடையாக அமைந்து விடுவதில்லை! என்று நிரூபித்து காட்டி இருக்கிறார்கள் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற ஒவ்வொரு பேரும்!

இந்தியா சார்பில் பங்கேற்ற அணி 29 பதக்கங்களுடன், பதக்க பட்டியலில் 18 ஆவது இடத்தை பிடித்திருக்கிறது.

கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் 71-வது இடத்தையே பிடித்திருந்த இந்திய அணிக்கு, பாரா ஒலிம்பிக் போட்டிகள் சிறப்பாகவே அமைந்திருக்கின்றன.

7 தங்கம் 9 வெள்ளி 13 வெண்கல பதக்கங்கள் உட்பட 29 பதக்கங்களுடன், தனது அதிகபட்ச பதக்க சாதனையை புரிந்து இருக்கிறது இந்திய பாரா ஒலிம்பிக் அணி.

இந்திய ஒலிம்பிக் அணி இரட்டை இலக்கத்தில் பதக்கங்களை வெல்ல வேண்டுமென! என்னுடைய முதல் கட்டுரைகளில் இருந்து தெரிவித்து வந்தேன்.

அந்த கனவு நிறைவேறாமல் போனாலும் கூட, 29 பதக்கங்களுடன் புதிய சாதனையை படைத்திருக்கிறது இந்திய பாரா ஒலிம்பிக் அணி.

நிச்சயமாக நான்கு வருடங்களுக்குப் பிறக,  2028 ஆம் ஆண்டு நடைபெறும் லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்திய பாரா ஒலிம்பிக் அணி ஐம்பதற்கும் மேற்பட்ட பதக்கங்களை கைப்பற்றும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதேநேரம், இந்திய ஒலிம்பிக் அணிக்கு இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டியதை இது உணர்த்துகிறது.

பதக்கம் வென்றாலும், வெல்லாவிட்டாலும்! பாரா ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற, உலகின் அனைத்து நாடுகளை சேர்ந்த ஒவ்வொரு வீரரும் சாதனையாளர் தான்.

உடலில் இருக்கும் ஊனம் ஒரு மனிதனை ஒருபோதும் தளர்ச்சியுற செய்யாது! என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள் இந்த ஒலிம்பிக் நாயகர்கள்.

மேலும் பாரா ஒலிம்பிக் போட்டிகள் குறித்த, விழிப்புணர்வு நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் என்னுடைய விருப்பம்.

அதன் மூலம், உடல் ஊனத்தால் சமூகத்தில் பல நெருக்கடிகளை சந்தித்து வரும் பல பேருக்கும் ஒரு அங்கீகாரமாக விளையாட்டுத்துறை அமையும்.

## 31 கணியம் அறக்கட்டளை

**தொலை நோக்கு** – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

**பணி இலக்கு** – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

**எமது பணிகள்**

- கணியம் மின்னிதழ் - kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- கட்டற்ற தமிழ் நூல்கள் - FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.
- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்

•தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்

•விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்

•OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

**நன்கொடை**

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation
Account Number : 606 1010 100 502 79
Union Bank Of India
West Tambaram, Chennai
IFSC – UBIN0560618
Account Type : Current Account